மிருககாட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிருககாட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மிருகங்களிற்கு பழங்களை வழங்குதல், பிஸ் இஸ்பா, யானை குளிப்பாட்டல் மற்றும் சிறுவர் மேடைக்காக சீட்டு விற்பனையால் கிடைத்த வருமானத்தில் உள்ளடங்கிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 8,294,320 இற்கு பெறுமதி சேர்த்து கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக குறித்த சீட்டு வருமான கணக்கிற்கு செலவு வைத்துள்ள காரணத்தால் சீட்டு விற்பனை வருமானம் அப்பெறுமதியால் கூடுதலாகவும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மீதி குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	மிருகங்களிற்கு பழங்கள், பிஸ் இஸ்பா, யானை குளிப்பாட்டல் மற்றும் சிறுவர் மேடைக்கான சீட்டு விற்பனையின் போது, வரி அறவிடுவது தொடர்பாக உறுதி செய்து கொண்ட பின்னர் வெட் பெறுமதி ரூபா 8,294,320 தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், 2025 ஆண்டு முதல் அதன் பிரகாரம், வெட் செலுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு அவதானிப்பின் ஒரு பகுதிக்கு மாத்தரமே பதில் வழங்கப்பட்டுள்ளது. சரியாக கணக்கு வைப்பது தொடர்பாக அலுவலர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.
(ஆ)	விற்பனை கூடங்களை வாடகைக்கு வழங்கியதற்காக பெறவேண்டிய மின்சார கட்டணம் ரூபா 2,218,016 தொகை ஆண்டின் மின்சார பட்டியல் வருமான கணக்கிற்கு மற்றும் பெறவேண்டிய மின்சார பட்டியல் கணக்கிற்கு சரியாக கணக்கீடு செய்துள்ள போதிலும் மீண்டும் மின்சார செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	மின்சார பட்டியல் வருமானமான ரூபா 2,218,016 தொகை தவறுதலாக மின்சார செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியாக கணக்கு வைப்பது தொடர்பாக அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.
(இ)	காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சலினுள் நிதியல்லாத	அந்த அனைத்து வித்தியாசங்ளையும் 2025 ஆண்டில் கணக்கு தயாரிக்கும்	சரியாக கணக்கு வைப்பது தொடர்பாக

	அசைவுகளின் கீழ் காணப்பட்ட 05 கணக்கு மீதிகளின் அசைவுகள் ரூபா 8,180,288 ஆன வித்தியாசத்துடன் காட்டப்பட்டிருந்தது.	போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.
(ஈ)	மிருங்கள மீள்மதிப்பீட்டு ஒதுக்க மீதியிலிருந்து கழிக்க முடியாத உருப்படி ஒன்றான மிருகங்களை கையேற்பதற்காக மேற்கொண்ட ரூபா 948,588 செலவு, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் மிருங்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.	மிருகங்களை கையேற்பதற்காக மேற்கொண்ட ரூபா 948,588 தொகை, மிருகங்கள் மீள்மதிப்பீட்டு கணக்கிற்குரிய கொடுப்பனவு ஒன்றாவதால் அந்த கணக்கிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.	சரியான கணக்கீட்டு முறையை பின்பற்ற அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.
(உ)	ரூபா 32,561,361 ஆன சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி வருமானக்கூற்றில் ஏனைய செலவுகளின் கீழ் காட்ட வேண்டிய போதும், அது நுழைவுப் பத்திர வருமானத்திலிருந்து கழித்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கட்டுப்பாட்டு கணக்கிற்கு செம்மையாக்கியுள்ளதால் மீளாய்வாண்டில் நுழைவுக் பத்திர வருமானம் மற்றும் ஆண்டின் செலவுகள் அப்பெறுமானத்தால் குறைவாகக் காட்டப்பட்டது.	2025 ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது அத் தொகையை ஏனைய செலவுகளின் கீழ் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	சரியாக கணக்கு வைப்பது தொடர்பாக அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

1.5.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2, 4.2.3 மற்றும் 5.3.10 வழிகாட்டிகள்	2023 ஆண்டிற்காக தெஹிவல மிருகக்காட்சிசாலைக்கு ரூபா 7,982,747 பெறுமதியான மருந்துகளை கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது அட்டவணை தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 91 நாட்களாக வேண்டிய விலைமணு செல்லுபடியாகும் காலஎல்லை 230 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது.	அரச மருந்தகத்தை பிரதிநிதிப்படுத்தி பங்குபற்ற வருகைதர முடியாதென எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மருந்தாளர்களும் திணைக்களத்தில் இல்லாததால் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வது மிருக வைத்தியர்களாவதுடன், பரிந்துரை வழங்க கவனிக்கத்தக்க அளவான காலமொன்று செலவாவதன் காரணமாக காலாவதியாகும் கால எல்லை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.	அரச பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 250,704,411 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 187,636,878 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 438,341,289 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நுழைவுச் சீட்டுக்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையும், வருகை தரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து சென்றமையும் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரிதியகம் சபாரி பூங்காவில் நுழைவு கருமபீடத்தால் பாடசாலை மாணவர்களிற்கு மற்றும் முன்பள்ளி மாணவர்களிற்கு நுழைவு சீட்டு வழங்க பயன்படுத்தப்படும் பொது 172 அடியிதழ் புத்தகங்களின் இரண்டாம் பிரதி பரீட்சிப்பின் போது முறைகேடாக எழுதப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்குரிய மூலப்பிரதிகளில் குறிப்பிடப்படும் தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் உறுதி செய்து கொள்ளும் போது மோசடியாக இரண்டாம் பிரதி மாற்றப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட 270 பற்றுச் சீட்டுக்களிற்கு இடையே மூன்றாம் தரப்பினரினால் உறுதி செய்து கொள்ள முடியுமான 20 பற்றுச்சீட்டுக்களில் 15 பற்றுச்சீட்டுக்கள் அதாவது உறுதி செய்த 75% அளவான பற்றுச்சீட்டுக்கள் மாற்றப்பட்டிருந்தன.	இந்த சம்பவம் வெளிப்படுத்தப்பட்ட உடனே அதற்கு தொடர்புடைய கட்டணம் அறவிடும் உதவியாளரின் பணியை தடை செய்து திணைக்கள விசாரணை ஒன்று செய்யப்படுவதென.	பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	போலியாக மாற்றியுள்ளதாக உறுதி செய்து கொள்ள முடியுமான 15 பற்றுச்சீட்டுக்கள் மூலம் இரண்டாம் பிரதியில் உள்ளடங்கும் பார்வையாளர் எண்ணிக்கை மற்றும் கட்டண அளவுகள் மூலப்பிரதியில் உள்ளடங்கும் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளடக்கியதன் ஊடாக ரூபா 53,690 ஆன நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.	போலியாக மாற்றியுள்ளதாக உறுதி செய்து கொள்ள முடியுமான 15 பற்றுச்சீட்டுகளுக்கான கட்டணமான ரூபா 53,690 தொகையை அறவிட பரிந்துரைக்கப்பட்டது.	பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	முறையற்றதாக எழுதியிருந்த எனினும் மூன்றாம் தரப்பினரிடம் உறுதி செய்வதனை கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ள இயலாது போன கூட்டுத் தொகை ரூபா 1,353,696 ஆன 250 பற்றுச்சீட்டுக்களும் காணப்பட்டன.	முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு முறைகேடாக எழுதப்பட்ட எஞ்சிய 250 பற்றுச்சீட்டுக்களிற்கு உரிய மூன்றாம் தரப்பினரிடமிருந்து தகவல்களை பெற்று மோசடியொன்று இடம்பெற்றுள்ளதா என விசாரிப்பது பொருத்தமென பரிந்துரைக்கப்பட்டது.	பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய மிருகக்காட்சி திணைக்களத்தின் கீழ் நாடு முழுவதும் செயற்படும் மிருகக்காட்சிசாலைகளிற்காக திணைக்கள அலுவலர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டிருந்த தன்னியக்க சீட்டுக்களை விநியோகிக்கும் தொகுதியொன்றை ஸ்தாபித்து நடாத்திச் செல்வதுடன் இந்தத் தொகுதியை ஆரம்பிப்பது நிறுவன செயற்பாடுகளிற்கு மிகமுக்கிய நடவடிக்கை ஒன்றைப் போன்றே வினைத்திறனை அதிகரிக்க மற்றும் மோசடி மற்றும் தவறுகளை தவிர்த்துக் கொள்வதைப் போன்றே அறிக்கையிடல் மற்றும் வருமான முகாமைத்துவம் தொடர்பான ஒழுங்கு முறைகளையும் இதன் ஊடாக ஏற்படுத்தியிருந்த போதும் தொகுதியை நிறுவனத்திற்கு உத்தியோகபூர்வமாக சுவீகரித்திருக்காதமை, தொகுதியின் தொடர்ச்சியான செயற்பாடு, நாடு முழுவதும் தொகுதியின் ஒறுமைப்பாடு மற்றும் நிலையான தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உரிய மேற்பார்வை முறையொன்றை தயாரித்திருக்காதமை மற்றும் பராமரிப்பு மற்றும் நாளாதுவரையாக்க பொறுப்புவாய்ந்த அலுவலர்களை நியமிக்காதமை போன்ற நிர்வாக பிரச்சினைகள் காணப்பட்டன.	இத்தொகுதியின் பயன்பாடு தொடர்பாக 04 உப நிறுவனங்களிற்காக பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் நாளாதுவரையாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திணைக்களத்திற்கு தகவல் தொழிநுட்ப அலுவலர்களின் சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.	தன்னியக்க சீட்டுக்களை விநியோகிக்கும் தொகுதிளை நிறவனத்தின் கீழ் உத்தியோக பூர்வமாக சுவீகரித்தல் மற்றும் தொகுதியின் தொடர்சியான செயற்பாடு, நாடு முழுவதும் ஒறுமைப்பாட்டுடன் மற்றும் நிலையான தன்மையுடன் பேணிச் செல்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டின் போது மிருகக்காட்சிசாலை திணைக்களத்திற்கு சொந்தமான மிருகக்காட்சிசாலைகளிற்கு மறக்கரி மற்றும் கீரைவகைகளை கொள்வனவு செய்ய ரூபா 69,428,799 தொகை பெறுமதியான பெறுகைகள் வழங்குனர்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனுள் திணைக்களத்திற்கு சொந்தமான பண்ணைகளினுள் இலகுவாக பயிர் செய்ய முடியுமான மற்றும் ஏற்கனவே பயிரிடப்படும் 63103 kg கங்குன், பொன்னங்கண்ணி 8700 kg மற்றும் 2730 kg வல்லாரையும் உள்ளடங்கியிருந்ததுடன் அவற்றின் பெறுகைகள் பெறுமதி ரூபா	தற்போது கஹபொல மற்றும் கோனபொல பண்ணைகள் ஊடாக மொத்த கங்குன், வல்லாரை மற்றும் பொன்னங்காணி உற்பத்தி தினற்தோறும் வழங்கப்படுகின்றது.	நிலத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	17,841,373 ஆகவிருந்தது. அவை மொத்த மறக்கரி பெறுகை பெறுமதியின் 25 சதவீத அளவானது. வருடாந்த தேவைப்பாடுகளின் கங்குன் 10,103 kg மற்றும் வல்லாரை 2.5 kg அளவு கோனபொல பண்ணையிலிருந்து 2024 ஆண்டு முதல் 06 மாதங்களினுள் வழங்கப்பட்டு இருந்ததுடன், பண்ணையை சிறப்பாக அபிவிருத்தி செய்வதன் மூலம் மற்றும் நிலத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் மேற்குறித்த கீரை வகை தேவைப்பாட்டை பண்ணைகளினுள்ளேயே பயிரிட முடியுமெனவும் அதன் ஊடாக வருடாந்தம் அதற்காக செலவிடப்படும் பாரிய கிரயத்தை குறைத்துக் கொள்ள முடியுமெனவும் அவதானிக்கப்பட்டது.		
(இ)	திணைக்களத்தின் கீழ் காணப்படும் பூங்காவை பார்வையிட வருகைதருபவர்களில் ஒரு நபரிற்கு ஒரு அச்சிட்ட நுழைவு சீட்டு வீதம் விநியோகிக்கப்பட்ட போதும் ரிதியகம சபாரி பூங்காவில் பாடசாலை மாணவர்களிற்கு விநியோகிக்கப்படும் நுழைப் சீட்டுக்கள் 2023 திசெம்பர் மாதம் 23 திகதி முதல் முடிவடைந்திருந்ததுடன் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2025 மே 09 ஆம் திகதி வரை பாடசாலை மாணவர்களிற்கு நுழைவு சீட்டுக்களை விநியோகிக்கும் போது பாடசாலை மாணவர் குழுவொன்றிற்கு ஒரு சீட்டு வீதம் பொது 172 படிவம் மூலம் நுழைவுச் சீட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.	பாடசாலை மாணவ நுழைவு சீட்டுக்களை அச்சிட கடதாசி இல்லாததன் மீது பாடசாலை மாணவர் குழுக்களிற்கு பொது 172 பற்றுச் சீட்டை விநியோகிக்குமாறு அறிக்கப்பட்டதுடன 2024 திசெம்பர் மாதம் முதல; POS machine உபயோகிக் ஆரம்பித்தால் பொது 172 பற்றுச் சீட்டு விநியோகிப்பதில்லை என அறிவிக்கிறேன்.	நுழைவு சீட்டு விநியோகிக்கும் முறைமையை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நிதிக்கூற்றுக்களில் 2022 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 28,553,213 தொகையான ஆரம்பிக்கும் முற்பணத்தை (Mobilization Advance) குறித்த தரப்பினரிடமிருந்து வேலை பூர்த்தி செய்யும் பட்டியல்களை பெற்றுக் கொண்டு தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு செலுத்திய முற்பணத்தை தீர்த்துக் கொள்ள முடியாதுள்ளதானது நிர்மாண கருத்திட்டத்தின் பலவீனமான முன்னேற்றம் காரணமாக அக் கருத்திட்டங்களின் ஒப்பந்தங்களை நிறைவு செய்தல் மற்றும் வேலைகளை பூர்த்தி	முற்பணத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		செய்த கருத்திட்டங்களில் மேற்கொண்ட பணிகளிற்காக பட்டியல்களை சமர்ப்பிக்காத காரணங்களினால் ஆகும். அதனால் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 29,734,197.00 தொகை, விடுவிக்கப்படாத நிறுத்தற் பணம் (Retention) ரூபா 15,675,960.11 தொகை மற்றும் பணிகள் (Work done) மேற்கொண்டுள்ள போதும் பட்டியல்களை சமர்ப்பிக்காத மற்றும் கொடுப்பனவு செய்யப்படாத கருத்திட்டங்களில், மேற்கொள்ளப்பட்ட (Work done) பணிகளிற்காக கணக்கிடப்பட்ட தொகையான ரூபா 33,011,524.49 தொகைகளாகும். அதன் பிரகாரம் இயந்திர உபகரண நிறுவனத்திற்கு விடுவிக்கப்படாத நிறுத்தட் பண (Retention) அளவான ரூபா 15,675,960.11 தொகையை அரச வருமானத்திற்கு செலவு வைத்துள்ளதுடன் அற்த நிறுவனத்திற்கு செலுத்தப்படவுள்ள ரூபா 33,011,524.49 தொகையை அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட மாட்டாது.	
(உ)	பண்ணைகளை ஆக்கபூர்வமாக மற்றும் அதன் நிலத்தை பூரணமான பயன்பாட்டுடன் நடாத்திச் செல்வதற்கு தேவையான பயிற்றப்பட்ட ஊழியத்தை வழங்கவில்லையென மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. பண்ணைகளில் உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கையை ஒப்பிடும் போது கோனபல பண்ணையில் ஒரு தொழிலாளிக்கு 1.07 ஏக்கரும் கஹபொல பண்ணையில் ஒரு தொழிலாளிக்கு 17.75 ஏக்கரும் காவுகை செய்யப்படவுள்ளது.	கஹபொல இற்காக பயிற்றப்பட்ட ஊழியம் வழங்கப்படவில்லை. பயிற்றப்படாத நாள் ஊழியர்களினால் கஹபொல பண்ணை நடாத்திச் செல்லப்படுகின்றது. கோனபொல பண்ணைக்கு பயிற்றப்பட்ட போதிய ஊழியம் வழங்கப்பட்டுள்ளது.	கட்டுப்பாட்டுத் தொகுதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தெஹிவலை மிருகக்காட்சிசாலையில் ரூபா 45 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் பூர்த்தி செய்ய எதிர்பார்த்த 04 பணிகளை ஆண்டினுள் பூர்த்தி செய்ய கொள்ள முடியாதிருந்ததுடன் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அபாயகரமான கம்பிகளை அகற்றுவதன் பௌதீக செயல் முன்னேற்றம் 15 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 100 மில்லியன் அளவாவதுடன் இக் கருத்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு கிடைப்பது பகுதிகளாக ஆகும்.	செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பின்னவல் மிருகக்காட்சிசாலை பணிக்களிற்காக ஒதுக்கியுள்ள மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 23.18 மில்லியன் அதாவது 50 சதவீத நிதி ஏற்பாடு பீலாள குலத்தின் சிறிய மிருகங்களிற்காக அரண் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கியிருந்த போதும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 15 சதவீதமாகும். அவ்வாறே மீளாய்வாண்டினுள் சிங்கங்களின் காட்சிக் கூடத்தின் (Lion Exhibition) முதலாம் கட்டத்தை நிறைவு செய்து பூர்த்தி செய்ய ரூபா 9 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கியிருந்த போதும் அப்பணி மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	1) பீலாள குலத்தின் சிறிய மிருகங்களிற்காக அரண் ஒன்றை நிர்மாணிப்பது மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் அறிவுரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் பெறுகைகள் நடைமுறை மூலம் தெரிவு செய்யப்பட்ட நிர்மாண நிறுவனத்திற்கு 2024/12/17 திகதியிலிருந்து 180 நாட்களில் வேலைகளை நிறைவு செய்ய ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2025/04/30 திகதியளவில் பௌதீக ரீதியாக 65% அளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2) பின்னவல மிருகக்காட்சிசாலையின் சிங்கங்களிற்காக அரண் ஒன்றை நிர்மாணிக்க 2024 ஆண்டில் தேவையான திட்டத்தை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் மூலம் செய்து கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த அரணை நிர்மாணிக்கும் இடத்தை தீர்மானிப்பதற்காக நிலத்தின் நிலஅளவை திட்டமொன்றை தயாரிக்க தேவைப்பட்டதால் 2024 ஆண்டில் திட்டம் தயாரிப்பதனை நிறைவு செய்ய முடியவில்லை.	செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	ஹம்பந்தொட சபாரி பூங்காவின் 06 பணிகளிற்காக ரூபா 38.44 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 37.44 மில்லியன் அதாவது	ஒரு பணிக்கான காலநிலை அறிக்கையை பெற்றுக் கொள்ள தாமதித்தமை, இரண்டு பணிகளிற்காக பொறியியலாளர்கள் இல்லாதமை, ஒரு பணிக்காக விலைமனு கோருதல்	செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மொத்த நித ஏற்பாட்டின் 92.4 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்த பணிகளின் பௌதீக செயல் முன்னேற்றம் 20 சதவீதம் மற்றும் அதற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	இரண்டு முறை மேற்கொள்ள நேர்ந்தமை மற்றும் ஊழிய பற்றாக்குறை செயல் முன்னேற்றம் குறைவடைய காரணமாக இருந்தது.	
(ஈ)	பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானை மடுவை கட்டுவதற்காக ரூபா 33 மில்லியனான நிதி ஏற்பாடு ஒதுக்கியிருந்த போதும் அந்த மடுக்களில் தற்போது காணப்படும் யானைகளை அப்புறப்படுத்த முன்கூட்டிய திட்டம் இல்லாதமை மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் தாமதம் காரணமாக ஆண்டு இறுதியிலும் டென்டர் ஆனது மதிப்பீட்டு மட்டத்தில் காணப்பட்டது.	யானை மடுக்கள் 03 இனையும் ஒரே தடவையில் திருத்துவதற்கு அந்த மடுக்களில் உள்ள யானைகளை அகற்றுவதற்கு போதிய இடவசதி மற்றும் பாதுகாப்புடன் கூடிய இடம் இல்லாத காரணத்தால 2024 ஆண்டில் ஒரு மடுவை மாத்திரம் திருத்த நேரிட்டது. குறித்த திருத்தங்களை மேற்கொள்ளவதற்காக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தினால் குறித்த திட்டம் மற்றும் மதிப்பீட்டை தயாரிக்க அதிக காலத்தை எடுத்த காரணத்தால் தாமதித்துள்ளது. எனினும் குறித்த கருத்திட்டத்தை 2024.10.23 திகதி ஆரம்பித்துள்ளதுடன் 2025.03.30 திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	மதிப்பீட்டிலான நிதி ஏற்பாட்டை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மிருகக்காட்சிசாலை திணைக்களத்திற்கு உணவு உற்பத்தி செய்யும் நோக்கில் நடாத்திச் செல்லும் 71 ஏக்கர் அளவைக் கொண்ட கஹபொல பண்ணை காணியிலிருந்து அண்ணளவாக 30 ஏக்கர் அளவில் பயிர்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அண்ணளவான எஞ்சிய 41 ஏக்கர் நில அளவு விளைவற்று காணப்பட்டது.	கஹபொல பண்ணையில் உணவு உற்பத்தி செயற்பாடுகள் 2022 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதும் அவ்வப் போது அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக அதன் உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை இடைக்கிடையே முழுமையாக நிறுத்த அறிவுரை கிடைத்ததால் அது இங்கு பயிர்செய்கை நடவடிக்கைகள் அதிகளவில் குறைவடைய காரணமாக இருந்தது. இவ்வாண்டு பயிர்செய்கை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை பத்திரம் மூலம் தடை ஏற்படாவிடின் கஹபொல பண்ணையின் பயிர்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்து கொள்ள முடியுமாகும்.	நிலத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளவாறான செலவுகளை ஒப்பிடுகையில் 02 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 2,151,137 பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை, திருத்தி மீண்டும் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரத்தை பெற்றுள்ளதாகவும் பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சவில்லை எனவும் தயவுடன் அறிவிக்கிறேன்.	திருத்திய மதிப்பீட்டின் பிரகாரமும் மதிப்பீட்டை விஞ்சி செலவு செய்யப்பட்டுள்ளது. செலவின எல்லைகளை விஞ்சாதிருக்க பொறுப்பேற்க வேண்டும்.